| O.S.No. 260/2022 | PW1: திருமதி. ரமணி<br>க/பெ. திரு. பாலகிருஷ்ணன் | 05-03-2026 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>2-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. நான் 7-ம் வகுப்பு படித்துள்ளேன். இல்லத்தரசியாக உள்ளேன். எனக்கு ஜூன் மாதம் 1974-ம் ஆண்டு திருமணம் நடந்தது. திருமணத்தின்போது எனது பெற்றோர்கள் எனக்கு சீர்வரிசை பொருட்கள் எதுவும் கொடுக்கவில்லை, திருமணம் எனது கணவர் வீட்டு செலவில்தான் செய்து வைக்கப்பட்டது. எனது பெற்றோர்கள் எனக்கு 60 சவரன் நகை போட்டு திருமணம் செய்து வைத்தார்கள் என்று சொன்னால் அது பொய் ஆகும். திருமணமாகி 20 ஆண்டுகள் கழித்து நான் சென்னையில் ஒரு மனை வாங்கினேன் என்றால் சரிதான். அந்த மனை வாங்குவதற்கு என் தந்தை ரூ.1,00,000/- கொடுத்தார் என்றால் சரியல்ல, அவர் எதுவும் கொடுக்கவில்லை.

2. தாவா சொத்துக்கள் அனைத்தும் புளியரம்பாக்கம் கிராம எல்லையில் உள்ளது. தாவா சொத்துக்கள் நிலமும் வீடும் கொண்டவை ஆகும். தாவா சொத்துக்கள் அனைத்தும் எனது பெற்றோர்கள் வாங்கியதுதான். எனது வழக்கில் இருக்கின்ற ஒரு வீட்டைத்தான் குறிப்பிட்டுள்ளேன். நிலம் எவ்வளவு இருக்கும் என்றால் சுமார் 4 முதல் 5 ஏக்கர் இருக்கும். அதன் சர்வே எண் குறிப்பிட்டு தெரியாது. அதேபோல், வீட்டின் சர்வே எண், அதன் அமைவிடம் பற்றி எனக்கு தெரியாது. நான் எனது முதல் விசாரணையில் திருமணத்திற்கு பிறகு தாவா சொத்துக்களை என்னை அனுபவிக்க விடவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

3. எனக்கு திருமணத்தின்போது 60 சவரன் நகை போட்டதாலும், சென்னையில் மனை வாங்க எனக்கு என் தந்தை ரூ.1,00,000/-

கொடுத்ததாலும் தாவா சொத்துக்களில் எனக்கு பாகம் வேண்டும் என சொல்லி என் அண்ணனுக்கும் தம்பிக்கும் வாய்மொழி அக்கு விடுதலை மூலம் பாத்தியப்படுத்திவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக தாவா சொத்துக்கள் குறித்து வில்லங்கம் போட்டு பார்த்தீர்களா என்றால் பார்க்கவில்லை. நான் வில்லங்கம் போட்டு பார்த்திருந்தால் தாவா சொத்துக்களை என் தந்தை என் சகோதரர்களுக்கு எழுதி வைத்த விஷயம் எனக்கு தெரிந்திருக்கும் என்றாலும், பின்னர் நான் வழக்கு தாக்கல் செய்திருக்க மாட்டேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்துக்கள் என் தந்தையின் சுயராஜ்ஜிய சொத்துக்கள் என்பதால் அதனை என் தந்தை பிரதிவாதிகளுக்கு எழுதி வைத்துவிட்டார் என்றாலும், அதனால் நான் எந்தவொரு பாக உரிமையும் கேட்கமுடியாது என்றாலும் சரியல்ல. எனக்கு திருமணமாகி 51 ஆண்டுகள் ஆகிறது. அந்த 51 வருடங்களாக நான் தாவா சொத்தை அனுபவித்து வந்ததில்லை.

(2-ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஓம்/- ரமணி

சாட்சியின் கையொப்பம்

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.05 11:27:48 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**